ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2270/31 - 2022 මාර්තු මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.03.10

*2270/31 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**சப்பிரகமுவ மாகாண மாகாண சபை**

*1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீட்டு வாடகைச் சட்டம்*

அரசியல் யாப்பின் 154(இ) பிரிவின் மூலமும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2(அ) உட்பிரிவின் மூலமும் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீட்டு வாடகைச் சட்டத்தின் 2(1)(ஆ) பிரிவின்படி சப்பிரகமுவ மாகாண சபையின் ஆளுநர் என்ற வகையில், டிக்கிரி பண்டா கொப்பேகடுவ ஆகிய நான் இவ்வறிவித்தலின் மூலம்;

(அ) 1995.07.07 ஆம் திகதியுடைய வர்த்தமானியில் மாகாண சபை அறிவித்தல்களின்கீழ் சப்பிரகமுவ மாகாண சபைக்கு ஏற்புடையதாக 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீட்டு வாடகைச் சட்டம் தொடர்பில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலின் 02 ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு மேற்கூறிய வீட்டு வாடகைச் சபை செயற்பட வேண்டிய பிரதேசங்களாக திருத்தம் செய்கின்றேன்.

(ஆ) இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியானது, இந்த அறிவித்தல் செல்லுபடியாக வேண்டிய திகதியாக கட்டளையிடுகிறேன்.

**டிக்கிரி பண்டா கொப்பேகடுவ,**
ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாண சபை.

சப்பிரகமுவ மாகாண சபையின் ஆளுநர் அலுவலகம்,
2022, பெப்புருவரி 24.



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

இரத்தினபுரி மாவட்டத்திற்குள் அமைந்துள்ள ஒவ்வொரு பிரதேச சபை மற்றும் உள்ளூராட்சிப் பிரிவுகளின் நிர்வாக எல்லைகளுக்கு உட்பட்ட பிரதேசம்.

| 02. ***இரத்தினபுரி மாவட்டம்*** | ***உட்படுத்த வேண்டிய வீட்டு வாடகைச் சபை*** |
|---|---|
| இரத்தினபுரி மாநகர சபை | இரத்தினபுரி |
| எம்பிலிபிட்டிய நகர சபை | மேற்படி |
| பலங்கொட நகர சபை | மேற்படி |
| குருவிட்ட பிரதேச சபை | மேற்படி |
| எஹெலியகொட பிரதேச சபை | மேற்படி |
| இரத்தினபுரி பிரதேச சபை | மேற்படி |
| பலங்கொட பிரதேச சபை | மேற்படி |
| வெலிகெபொல பிரதேச சபை | மேற்படி |
| பெல்மடுல்ல பிரதேச சபை | மேற்படி |
| கஹவத்த பிரதேச சபை | மேற்படி |
| கொடக்கவெல பிரதேச சபை | மேற்படி |
| எம்பிலிபிட்டிய பிரதேச சபை | மேற்படி |
| கொலொன்ன பிரதேச சபை | மேற்படி |
| நிவித்திகல பிரதேச சபை | மேற்படி |
| அயகம பிரதேச சபை | மேற்படி |
| இம்புல்பே பிரதேச சபை | மேற்படி |
| கலவான பிரதேச சபை | மேற்படி |

EOG 03 - 0834

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.